கோறளைப்பற்று பிரதேச சபை-2013

------------------------------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

------------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 மே 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 07 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று பிரதேசசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

--------------------------------------------------------------------------------------------------------------

உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றிநிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

----------------------------------------

மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2004 முதல் 2010 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடை குத்தகைப் பணமாகிய ரூபா. 504,135 தொகையை அறவிடுவதற்கு அல்லது அதற்காக ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐம்பத்தி மூன்று குத்தகைக்காரர்களிடமிருந்து ரூபா.3,436,360 தொகையான குத்தகைப்பணம் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அவற்றினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரு குத்தகைக்காரர்களிடமிருந்து ரூபா.999,600 ஆன குத்தகைப் பணத்தை அறவிட இரண்டு வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதவியை விட்டுச் சென்ற மற்றும் இளைப்பாறிச் சென்ற பத்து ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா.131,679 கடன் மீதியை மரணப்பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 யூலை 31வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4. கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | சான்றுகளின்மை |
| --- | --- | --- |
| காணிகட்டிடம் | 119,544,690 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதி இயந்திரங்கள் | 1,362,766 | நிலையான சொத்துப் பதிவேடுகள், சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| மோட்டார் வாகனங்கள் | 3,228,788 | |
| தளபாடங்கள் | 4,572,951 | |
| கணனி | 884,815 | |
| நூல் நிலைய புத்தகங்கள் | 4,145,182 | |

1.3.5. சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
| --- | --- | --- |
| 988ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் திநிருவாகவிதிகள் | | |
| (i) | அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் |

வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (iii)அத்தியாயம் X இன் பிரிவு 191 | மீளாய்வாண்டின் மூன்று சபைக் கூட்டங்கள் நடை பெற்றிருந்த போதிலும், அக் கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்திய பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv)அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டுக்கான வருமானம் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுதிட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

2. நிதிமீளாய்வு.

----------------------

2.1 நிதிவிளைவுகள்.

---------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி, 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,843,123 ஆகும். எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா.1,277,989ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா.6,121,112 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

--------------------------------------

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

-----------------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வித்தியாசம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வரிகள் | 3,975,000 | 453,670 | 3,521,330 | 88.59 |
| பற்றாணைச் செலவுகள், தண்டப்பணங்கள் | 7,005,000 | 6,058,067 | 946,933 | 13.51 |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

--------------------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3குத்தகைகள்

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் ஆறு குத்தகைக்காரர்களுக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தபோதிலும், குத்தகைப் பணம் ரூபா. 1,904,600 சபையால் 2014 யூலை 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சந்திவெளி படகுசேவை குத்தகை தொடர்பாக ஒரே ஒரு கூறு விலை மாத்திரம் பெறப்பட்டு ரூபா.240,100 இற்கு வருடத்திற்கான குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், நிபந்தனையின்

படிகுத்தகையின் 50%ம குத்தகை உடன்படிக்கை செய்யப்படும் போது குத்தகைக்காரரால் செலுத்தப்படாது 12 மாதங்கள் தாமதத்தின் பின் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக நாசீவன் தீவு படகுக் குத்தகை ரூபா. 105,000 தொகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குத்தகை பணத்தின் அரைப் பகுதி உடன் செலுத்தாமல் குத்தகை உடன்படிக்கை சபையால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

2.2.4. ஏனைய வருமானம்

------------------------------

திறந்த வெளிசந்தைக் கடை வாடகை

--------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் பிரகாரம் திறந்த வெளிசந்தையில் உள்ள 25 கடைகளுக்கு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.5. முத்திரைக் கட்டணங்கள்

-------------------------------------------

முத்திரைக் கட்டணம்

------------------------------

2013 ஆம் ஆண்டுக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக்கட்டணத் தொகையினை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 யூலை 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

-------------------------------------------------------

சபையினால் cs;@uhl;rp மன்றங்களில் ஒய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்பு பணத்தை மாதாந்தம் செலுத்துவதற்கு 1995 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படாததால் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா.2,037,203 பங்களிப்பு பணத்தை செலுத்தவேண்டி உள்ளது

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

4.1 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றைஉருவாக்கி கொள்ளவேண்டுமென மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற் கமைய சபையில் உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு